Tiaano® Innovation In Inert Metals
**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified
Ti Nb Ir Ta Ru Pt
#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

**“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”**

## GOAL 2011-2012

- Endeavor : QUALITY
- Turnover Target : 240% ↑
- Products for ...
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- Rejection Rate :100% ↓

## TESTIMONIALS

- Customers...
  - Up to Nov. 11 : 499 Nos.
  - Up to Oct. 11 : 490 Nos.
- Performance Nov. ‘11 ...
  - Turnover growth : 16.52%
  - Employment growth : 5.38%
  - 100% Attendance : 14.77%

## MANAGEMENT

- Managing Director
  - Mr. Velappan Jeyakummar
- Board of Directors
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm
(CBSC Pattern School)

## ACHIEVEMENT




## Cost for Human

In one day human being breathes oxygen equivalent to three cylinders.

Each oxygen cylinder on an average costs Rs. 700/- so in a day one uses oxygen worth Rs. 2100/- and for full year it is Rs. 7,66,500/-

If we consider an average life span of 65 years, the costs of oxygen we use become a staggering sum of Rs. 5,00,00,000/-.

All this oxygen is delivered free of cost from the surrounding trees.

Very few people look at trees as a resource and there is rampant tree cutting going on everywhere which should stop.

Let us save our environment.

Compiled by
Prof. Raja D. Pechimuthu

## Your life is a reflection of you

A son and his father were walking in the mountain. Suddenly, his son falls, hurts himself and screams: “AAAhhhhhhhhhhh!!!” To his surprise, he hears the voice, somewhere in the mountain: “AAAhhhhhhhhhhh!!!”

Curious, he yells: “Who are you?” He receives the answer: “Who are you?” Angered at the response, he screams: “Coward!” He receives the answer: “Coward!”

He looks at his father and asks: “What's going on?” The father smiles and says: “My son, pay attention.” And then he screams at the mountain: “I admire you!” The voice answers: “I admire you!” Again the man screams: “You are a champion!” the voice answers, “You are a champion!”

The boy is surprised, but does not understand. Then the father explains:

- “People call this an ‘echo’, but really this is ‘Life’.
- It gives you back everything you say (or do).
- Our life is simply a reflection of our actions.
- If you want more love in the world, create more love in your heart.

If you want more competence in your team, improve your competence. This relationship applies to everything, in all aspects of life. Life will give you back everything you have given to it.”

Your life is not a coincidence; it's a reflection of you!

Compiled by Mr. C. Abilash
Facilitation

## FUNCTIONAL WISHES



New Year
1st January



Pongal
14th January




Republic Day
26th January

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

**Banking** : M/s. UCO Bank
**Auditing** : M/s. Nisar & Kumar
**AQ Auditing** : M/s. Juran Quality
**Legal Advisers** : Lr. M.K. Govindan
: Lr. V. Benedict Vincent
**Tech. Consultant:** Dr.G.S. Viswanath
**Central Excise** : Mr. R. Raghavan
**Health Care** : M/s. Bethesda Hospital
Tel:22294565
Jeya Clinic,
Tel: 98408 73107

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. G. Ravindran**<br>**Fibtec - Purchase** | **Jan 06** |
| **Mr. C. Sivakumar**<br>**Production** | **Jan 10** |
| **Mr. R. Manikandan**<br>**Production** | **Jan 14** |
| **Mrs. S. Sasi Rekha**<br>**Marketing** | **Jan 19** |
| **Mr. P. Munuswamy**<br>**Fibtec - Production** | **Jan 19** |
| **Mr. M. Nagarajan**<br>**Production** | **Jan 20** |
| **Mr. G. Murugesan**<br>**Store** | **Jan 21** |
| **Mr. P. Seenivasan**<br>**Administration** | **Jan 23** |
| **Mrs. J. Vanajambika Jeyakummar**<br>**Director – Admin** | **Jan 27** |
| **Mr. A. Nazir Khan**<br>**Administration** | **Jan 30** |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு விமானத்தில் இரண்டாம் வகுப்பு பிரிவில் வெள்ளைக்காரப் பெண்ணுக்குப் பக்கத்து இருக்கையில் ஒரு கறுப்பர் வந்து அமர்ந்தார். வெள்ளைக்காரப் பெண்ணுக்கு வெறுப்பு. விமானப் பணிப்பெண்ணை அழைத்தார். “இவர் எப்படி என்னருகே அமரலாம்? வேறு இருக்கை வேண்டும்” என்றார். விமானப் பணிப்பெண், “இருக்கைகள் எல்லாம் நிரம்பிவிட்டன” என்றார். “முதல் வகுப்பில் இருக்கிறதா பார்?” என்றார்.

தலைமை விமானியிடம் பேசிவிட்டுத் திரும்பிய பணிப்பெண் சொன்னார், “இரண்டாவது வகுப்புப்பயணிகளை முதல் வகுப்பில் அமரச் செய்யும் பழக்கமில்லை என்றாலும் பயணிகள் மனமகிழ்ச்சியே எங்களுக்கு முக்கியம் எனவே விதிகளைத் தள்ளி வைக்கிறோம்”. பிறகு, அந்தக் கறுப்பரிடம் திரும்பிச் சொன்னார் விமானப் பணிப்பெண், “ஐயா! தயவு செய்து வாருங்கள்! முதல் வகுப்பில் உங்களுக்கோர் இருக்கை தயாராக இருக்கிறது” என்று!

—கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## POWER OF தமிழ் !!!

1 = ONDRU – one
10 = PATHU – ten
100 = NOORU – hundred
1000 = AAYIRAM – thousand
10000 = PATTAYIRAM – ten thousand
100000 = NOORAYIRAM – hundred thousand
1000000 = PATTU NOORAYIRAM – one million
10000000 = KOODI – ten million
100000000 = ARPUTHAM – hundred million
1000000000 = NIGARPUTAM – one billion
10000000000 = KUMBAM – ten billion
100000000000 = KANAM – hundred billion
1000000000000 = KARPAM – one trillion
10000000000000 = NIKARPAM – ten trillion
100000000000000 = PATHUMAM – hundred trillion
1000000000000000 = SANGGAM – one zillion
10000000000000000 = VELLAM – ten zillion
100000000000000000 = ANNIYAM – hundred zillion
1000000000000000000 = ARTTAM - ??????
10000000000000000000 = PARARTTAM – anybody know?
100000000000000000000 = POORIYAM ---????????? ?????
1000000000000000000000 = MUKKODI - ??????????? ???????
10000000000000000000000 = MAHAYUGAM - ??????????? ??????

One of the oldest and greatest languages in the world !!!
**இது தான் தமிழ் !!!**

**Compiled by Mr. S. Siva Deepan**
**Facilitation**

## தெரிந்து கொள்வோம்

- யானைக்கு வெள்ளை நிறத்தைக் கண்டால் பிடிக்காது. அதனால்தான் யானைகள் இருக்கும் பகுதியில் உள்ள மைல் கற்களுக்குக் கருப்பு வண்ணம் பூசப்படுகிறது. இல்லாவிடில் யானைகள் வெள்ளைக் கற்களைப் பெயர்த்து எறிந்துவிடும்.

- பூனைக்கு வெவ்வேறு வண்ணங்கள் பற்றிய அறிவே கிடையாது. அதன் கண்களுக்கு எல்லா வண்ணங்களுமே கருப்பு வெள்ளையாகத்தான் தெரியும்.

- கடலுக்கு அடியில் மொத்தம் 60,000 மைல்கள் நீளத்துக்கு மலைத் தொடர்கள் உள்ளன. கடலுக்கு அடியில் காணப்படும் மலைத்தொடர்கள் ஒன்று அட்லாண்டிக் பெருங்கடலில் தொடங்கி இந்தியப் பெருங்கடல் வழியாகச் சென்று பசிபிக் பெருங்கடலைக் கடந்து மெக்சிகோவின் மேற்குக் கடல் பகுதியை அடைகிறது.

- நேபாள நாட்டில் மாலை நேரத்தில் மட்டுமே மழை பெய்கின்றது.

- உலகம் முழுவதும் 2 லட்சத்து 30 ஆயிரம் வகை பூக்கும் தாவரங்கள் உள்ளன.

- பெரும்பாலும் எல்லோரும் வலது கையால்தான் எழுதுவார்கள். சிலர் இடது கையாலும் எழுதுவார்கள். ஆனால் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஒரு கையினால் கிரேக்க மொழியிலும் மற்றொரு கையினால் லத்தீன் மொழியிலும் ஒரே நேரத்தில் எழுதக் கூடியவராக இருந்தார்.

- முதலை இறக்கும் வரை வளர்ந்து கொண்டே இருக்கும். இந்தச் சிறப்பு வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது.

- வாரத்திற்கு ஏழு நாட்கள் — மாதத்திற்கு 30 நாட்கள் — வருடத்திற்கு 365 நாட்கள் என்பதைப் பாரதமே உலகத்திற்கு வழங்கியது. 1752 ம் ஆண்டு தான் ஜனவரி 1–ந் தேதியை கொண்ட 12 மாதங்கள் 365 நாட்கள் கொண்ட வருட முறையை இங்கிலாந்து பின்பற்றத் தொடங்கியது. இது பாரதத்திற்குள் ஆங்கிலேயர்கள் நுழைந்த பிறகே ஏற்பட்ட மாற்றமாகும்.

**Compiled by : Mr. D.S. Anish**
**System Admin**

## பலன் எதிர்பாரா நற்செயல் பலன் தரும்

ஒரு முறை ஒரு மன்னரும் அவர் அமைச்சரும் மாறுவேடத்தில் நகரை வலம்வந்தனர். அப்போது வயதான முதியவர் ஒருவர் பழச்செடி ஒன்றை நடுவதைக் கண்டனர்.

மன்னர் முதியவரை நெருங்கி “தாங்கள் மரணத்தை நெருங்கும் முதியவராக இருக்கிறீர். இந்த செடி மரமாய் வளர்ந்து பழத்தை நீங்கள் உண்ணவாபோகிறீர்கள்... இச்செடியின் பழத்தை உண்ணும் அளவுக்கு வாழ பேராசை ஏன்? என்றார்.

அம்முதியவரோ இப்படி ஒவ்வொருவரும் பல ஆண்டு கழித்து விளையும் கனியை நாம் உண்ணவாப் போகிறோம் என்று எண்ணி செடிகளை நடாமல் இருந்தால் பூமியில் பழ மரங்கள் உண்டாகுமா என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் அவருக்கு ஒரு பொன்முடிப்பு தந்தார். அப்போது அந்த முதியவர் என் செடி எனக்கு பலனளிக்குமா என்கிறீர்கள் இதோ பாருங்கள் உடனே பலன் தந்துவிட்டதே என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் அவருக்கு மீண்டும் ஒரு பொன்முடிப்பு தந்தார். அப்போது அந்த முதியவர் ஒரு மரம் வருடத்தில் ஒரு முறை தான் கனி தரும் ஆனால் நான் நட்ட இந்த செடியோ ஒரே நேரத்தில் இரண்டு முறை பலன் அளித்து விட்டதே என்றார்.

அதைக்கேட்டு மகிழ்ந்த மன்னர் மூன்றாம் முறையாக அவருக்கு ஒரு பொன்முடிப்பு தந்தார். பிறகு தன் அமைச்சரிடம் “இந்த இடத்தில் நாம் இருந்தால் இந்த முதியவர் இப்படி புத்திசாலித்தனமாகப் பேசிப் பேசியே நம் மொத்த கஜானாவையும் காலி செய்திடுவார்” என்று சொல்ல இருவரும் அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

**Compiled by : Mr. Shahul Hameed Bava**
**Facilitation**

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி VI)

### ஐந்து குள்ளர்கள்

இதைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், முன்பு அண்ணாச்சி கடையில் பயோரியா பல்பொடி விசாரித்ததுபோல், இந்தக் கடையினுள் சென்று, ஒரு பழைய, மிகப் பழைய புத்தகத்தின் பெயரைச் சொல்லிக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

பொதுவாக பழைய புத்தகக் கடை என்று வாயால் சொன்னாலே, தூசு ஒவ்வாமை (டஸ்ட் அலர்ஜி) உள்ளவர்களுக்கு உடனடியாகத் தும்மல் ஆரம்பமாகிவிடும். அந்த அளவுக்குப் புத்தகங்கள் ஒழுங்கற்ற முறையில் கொட்டிக் கிடக்கும். அவற்றினுள் அபூர்வமான, காணக் கிடைக்காத சில பொக்கிஷங்களும் இருக்கும் தான். ஆனால், அவற்றைத் தேடிப் பிடிப்பதற்குள் கண் எரிச்சலில் தொடங்கி எல்லா வியாதிகளும் நம்மைத் தேடி வந்துவிடும்.

இந்தக் கடையில் அந்தப் பிரச்சனையே இல்லை. வருகிற புத்தகங்கள் எல்லாவற்றையும், தலைப்பு அல்லது ஆசிரியர் பெயரின்படி ஒழுங்கானமுறையில் அடுக்கி வைத்திருக்கிறார்கள். கம்ப்யூட்டர் பட்டியலெல்லாம்கூட இரண்டாம்பட்சம்தான். அநேகமாக இங்கே பணிபுரிகிற எல்லாருக்கும், எல்லாப் புத்தகங்களும் தெரிந்திருப்பதுபோல் ஒரு பிரமையை உருவாக்கி விடுகிறார்கள். அந்த அளவுக்கு, எந்தப் புத்தகத்தைக் கேட்டுச் சென்றாலும், உடனடி சர்வீஸ்.

உதாரணமாக, நீங்கள் பிரான்ஸ் நாட்டின் வரலாற்றைப் படிக்க விரும்பினால், உடனடியாக உங்களை ஒரு குறிப்பிட்ட அலமாரிக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கே பிரான்ஸ் மட்டுமில்லை, எல்லா ஐரோப்பிய நாடுகளைப்பற்றிய வரலாற்றுப் புத்தகங்களும் ஒரே இடத்தில் கிடைக்கின்றன. இந்தமாதிரி ஒரு சவுகரியத்தை, பளபளப்பான புதிய கடைகளில்கூடப் பார்க்க முடியாது.

Cont...4

## கவிதைகள்

### மனிதனா மிருகமா

மதத்திற்கே மதம் பிடிக்கும்
அளவிற்கு மதம் பிடித்திருக்கும்
மனிதனைவிட...
மதம் பிடித்தாலும் தன் கோபத்தை
தன் இனத்தின்மேல் காட்டாமல்
தன் இடத்தின்மேல் காட்டும்
யானையே எனக்கு மேல்...

தன் வீடு தன் மக்கள் தன் குடும்பம்
என வாழும் சுய நலக்காரனை விட
பாதித்தீனி கிடைத்தாலும் பகிர்ந்துண்டு
வாழும் காகமே எனக்கு மேல்...

குழந்தையை பாரமென்று எண்ணி
கால் ஊனமுடியா வயதிலேயே
கான்வென்ட்டுக்கு அனுப்பி வைக்கும்
மனிதனைவிட...
கால் வளர்ந்தபின்னும்
தன் குழந்தையை வயிற்றிலேயே சுமக்கும்
கங்காருவே எனக்கு மேல்...

மனிதநேயத்தோடு மனசார
சோறு போடுவான் ஒருத்தன்.
உண்ட உப்பு உரைக்கும் முன்னரே
உணவு போட்டவனையே
போடுவான் (அடி, வெட்டு) இன்னொருத்தன்.
இவர்களைவிட...
ஒருமுறை ஒரு பொறை (வருக்கி) போட்டால்
ஒருவாரம் வீட்டு வாசலில் கிடக்கும்
நாயே எனக்கு மேல்...

**Compiled by : Mr. M. Kumar**
**Design**

### அறிவிப்பு

நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (**kutties@tianode.com**) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு.** நிரந்தர பணியாளர்களின் குழந்தைகள் மட்டும் கலைநிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**இப்படிக்கு**
**விழாக்குழு**

**பணியாளர்கள் மற்றும்** பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து **கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

எல்லா ஊர்களிலும் தெருவுக்கு நான்கு பழைய புத்தகக் கடைகள் இருக்கின்றன. அவற்றுள் இந்த ஒரு கடையை மட்டும் வித்தியாசப்படுத்திக் காட்டுவது எது? பெரிய அளவில் வெற்றி அடையச் செய்தது எது?

புத்தகங்களை ஒழுங்கின்றி அடுக்கி வைக்கிற கடைகளில் நமக்கு வேண்டியவற்றைப் பொறுமையாகத் தேடிப் பிடிக்க வேண்டி இருக்கிறது. அதற்குப் பொறுமையில்லாமல் ஒரு வாடிக்கையாளர் வெளியேறிவிட்டால், இழப்பு அந்தக் கடைக்காரருக்குத்தானே?

இந்த விஷயம், புத்தகங்களுக்கு மட்டுமின்றி, நமது வீட்டு உபயோகப் பொருள்கள், அலுவலக ஆவணங்கள், இயந்திர உபகரணங்கள் என்று எல்லாவற்றுக்கும் பொருந்தும். தேவையான ஒரு பொருள், நமக்கு மிகவும் அவசியப்படுகிற நேரத்தில் கைக்குக் கிடைக்காதபோது, அதனால் ஏற்படுகிற நேர இழப்பு, மன்னிக்க முடியாத குற்றம்.

ஈடு செய்ய முடியாத இந்த நேர விரயம் ஒரு பக்கமிருக்க, இது போன்ற அலட்சிய நடவடிக்கைகளால் வீணாகிற மனித சக்தி, நேரடியான மறைமுகமான பொருளாதார இழப்புகளில் தீவிரத்தை, பெரும்பாலானோர் சரியாகப் புரிந்து கொள்வது இல்லை.
ஒரு சிறிய தொழிற்சாலையில் மொத்தம் ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இவர்களுக்குச் சராசரியாக இரண்டாயிரம் ரூபாய் மாதச் சம்பளம் தரப்படுகிறது.

இந்த ஆயிரம் ஊழியர்களும், நாளுக்கு எட்டு மணி நேரம் என்ற கணக்கில் வாரத்துக்கு ஆறு நாட்கள் பணி புரிகிறார்கள். அதாவது, மாதத்துக்குச் சுமார் 24 நாட்கள், 192 மணி நேரம் வேலை.

தொழிற்சாலை என்றாலே, பலவிதமான மனிதர்கள் புழங்குகிற இடம். ஆகவே, சிலருடைய அலட்சியத்தால் அங்கே அடிக்கடி முக்கியமான உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் காணாமல் போவது சகஜம்தான். அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்கும்வரை, வேலை சற்றே தடைப்படும்.

'சற்றே' என்றால்? எவ்வளவு?

தொடரும்...

## Mile Stone in Mechanical Equipments

